**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,  திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**
(Chapter XXIII Cr.P.C)

**CMP.NO.1320/2025**

**WITNESS NO.–1**

**Date: 13.10.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.  ஜெயக்குமார் | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | சுவிசேஷம் | மதம் | |
| கிராமம் | மாம்பாக்கம் | தொழில் | |
| வட்டம் | திருப்போரூர் | வயது | 66 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **13th day of October 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**பிரமாண வாக்குமூலம் –**

1. நான் மாம்பாக்கத்தில் உள்ள எஸ்.பி.ஐ ஒ.எ. யூனிட்டி என்கேளவ் என்ற அடுக்குமாடி குடியிருப்பில் கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். அது என்னுடைய சொந்த வீடு. நான் ஓய்வு பெற்ற ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் இயக்குனர். அந்த அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானத்தில் அதை கட்டிய பிள்டர்ஸ் அதிக விதி மீறல்கள் செய்து அதை கட்டியுள்ளார்கள். அந்த

குடியிருப்பில் கழிவு நீர் சுத்தீகரிப்பு மையம் உள்ளது. அதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் இருந்து அதை செயல் படுத்த கூடிய அனுமதி வாங்கி இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு அனுமதி வாங்காமல் அந்த உத்திகரிப்பு மையத்தை இது நாள் வரையில் இயக்கி வருகிறார்கள். அந்த அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள மூன்று பிளாக்குகளில் விதிமுறை மீறல்கள் இருப்பதால் அங்கு வசிக்கும் குடியிருப்பு வாசிகளை காலி செய்ய வேண்டும் என்று டி.டீ.சி.பி மூலமாக உத்தரவிடப்பட்டது.

2. அந்த கழிவுநீர் சுத்திகரிப்பு மையத்தை முறையாக பராமரிக்காததால் வீடுகளில் கழிவறையை பயன்படுத்த முடியாது மிகவும் துர்நாற்றம் வரும். கழிவுநீர் சுத்திகரிப்பு மையம் 4 அமைக்கப்பட்டு இருக்க வேண்டும் ஆனால் அங்கு ஒன்றுதான் உள்ளது. அதுவும் விதிமுறை மீறலாகும். அந்த சுத்திகரிப்பு மையத்தை மேல் தளத்தில் அமைக்காமல் அடித்தளத்தில் அமைத்துவிட்டார்கள். அதுவும் ஒரு விதிமுறை மீறலாகும். மேலும் கடந்த 2019 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை தீ பாதுகாப்பு உரிமத்தை புதுப்பிக்காமல் இருந்து வருகறிார்கள். மேலும் கழிவுநீர்களை முறையாக லாரிகள் மூலமாக அதற்கான ஒதுக்கப்பட்ட பெருங்குடியில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் அப்புறப்படுத்த வேண்டும். ஆனால் குடியிருப்பு நலச்சங்க பொறுப்பாளர்கள் அதனை அடுக்குமாடி குடியிருப்பின் அருகிலேயே அப்புறப்படுத்துகிறார்கள். மேலும் லாரிகள் மூலமாக கொண்டு சென்றாலும் இரவு நேரங்களில் எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் சாலைகளில் அதை அப்புறப்படுத்துகிறார்கள்.

3. மேற்கண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய நிலையத்திற்கு பெறவேண்டிய

செயலாக்க அனுமதியை பெறாமல் இருந்ததால் அதை ஆய்வு செய்த மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலர்கள் பில்டருக்கு ரூ.71.70 லட்சம் அபராதம் விதித்தார்கள். கடந்த ஒரு ஆண்டிற்கும் மேலாக மேற்கண்டவாறு கழிவுநீர் முறையாக அப்புறப்படுத்தாமல் அருகில் உள்ள கிராமங்களில் அப்புறப்படுத்துகிறார்கள். இதனால் மிகுந்த மாசு ஏற்படும் சூழல் உள்ளது. மேலும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் விதிமுறைகள் படி நான்கு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மூன்று மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது.

4. அந்த குடியிருப்புகளை சம்பந்தப்பட்ட உரிமையாளர்களும் ஒப்படைக்கப்பட்ட போது அடிப்படையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காமலேயே குடியிருப்புகள் ஒப்படைக்கப்பட்டது. 2 ஆம் எதிர்மனுதார் அந்த கட்டிடம் கட்டப்பட்ட 2014 முதல் 2019 காலத்தில் அவர் ஹவுசிங் கமிட்டி தலைவராகவும் செயல்பட்டார். அதன் பின்னர் எங்கள் வளாகத்தின் செயலாளராகவும் தலைவர் ஆகவும் செயல்பட்டார். தற்போதும் அவர்தான் செயலாளராக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அங்கு நடைபெற்ற முறைகேடுகளை நீதிமன்றத்தின் வாயிலாகவும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களை பெற்று அதை சரி செய்ய முயற்சிகள் செய்து வருகிறோம்.

5. அதனை எதிர்மனுதாரர்கள் தடுப்பதற்காகவும் எங்கள் மீது முன் விரோதம் கொண்டு செயல்பட்டு வருகின்றனர். அதில் குறிப்பாக 2 ஆம் எதிர்மனுதாரர் எங்கள் மீது மிகுந்த கோபத்தில் உள்ளார். இந்நிலையில் நலச் சங்கத்திற்கு ஒப்படைக்க வேண்டிய விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்காக குடியிருப்பு நிலத்தை விவசாய நிலமாக காண்பித்து சார்பதிவாளர் அலுவலத்தில் குறைந்த முத்திரைத்தாள் கட்டணம் 1.68 கோடி கட்டுவதற்கு பதிலாக 9 லட்சம் மட்டும் செலுத்தி அரசுக்கு நிதி

இழப்பை ஏற்படுத்த முயற்சி செய்தார்கள். அந்த விவரம் எங்களுக்கு தெரிந்த பிறகு நாங்கள் சார் பதிவகத்தில் அதனை அவ்வாறு பதிவு செய்யக்கூடாது என ஆட்சேபனை மனு கொடுத்தோம்.

6. அதன் அடிப்படையில் அந்த பதிவை சார்பதிவாளர் ரத்து செய்துவிட்டார். எனவே எதிர்மனுதாரர்கள் அந்த நிலத்தை விவசாய நிலம் என்று காண்பிப்பதற்காக நலச் சங்கத்தின் நிதியை எடுத்து செடிகள் அமைத்துள்ளார்கள். கடந்த 2020 ஆம் ஆண்டு விதிமுறைகளை மீறி எதிர்மனுதாரர்கள் அசாதாரண பொதுக்குழு கூட்டியதால் மாவட்ட பதிவாளரிடம் எங்கள் தரப்பில் முறையிடப்பட்டதால் மாவட்ட பதிவாளர் அந்த அசாதாரண பொதுக்குழுவை ரத்து செய்துவிட்டார். 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற குடியிருப்பு நலச் சங்க தேர்தலை நடத்துவதற்காக தேர்தல் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டதிலும் விதிமுறைகள் மீறல் நடந்துள்ளது.

7. மேற்கண்ட விதிமுறை மீறல்கள் அனைத்தையும் நாங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி தான் தெரிந்து கொண்டோம். அவர்கள் எந்த விவரங்களையும் எங்களுக்கு சொல்வதில்லை. இந்நிலையில் 2 ஆம் எதிர்மனுதாரர் அந்த கட்டிடத்தின் பில்டர் விதிமுறை மீறல்கள் புரிந்துள்ளதாகவும் அது குறித்து உரிய ஆய்வு செய்ய வேண்டும் என்று டிடிசிபியில் மனு கொடுத்தார். அதன் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று உயர் நீதிமன்றத்தில் டிடிசிபிக்கு எதிராக நீதிபராணை மனு தாக்கல் செய்தார். உயர் நீதிமன்றம் டிஎம்டிஏ மற்றும் டி டி சி பி க்கு உரிய ஆய்வு மேற்கொண்டு விதிமுறை மீறல்கள் இருந்தால் நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்டது.

8. அந்த கட்டிடம் கட்டப்பட்டபோது 2 ஆம் எதிர்மனுதாரர் தான் ஹவுசிங் கமிட்டி தலைவராக இருந்தார். அந்த காலத்தில் அவர் பாரத வங்கியின் மேலாளராகவும் அரசு ஊழியராகவும் இருந்து கொண்டே மேற்கண்ட விதிமுறை மீறல்கள் ஏற்பட உடந்தையாக இருந்துள்ளார். நாங்கள் மேற்கண்ட விதிமுறை மீறல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தெரிந்து கொண்டு அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதால் எங்கள் மீது முன் விரோதம் கொண்ட எதிர்மனுதாரர்கள் கடந்த 23/08/2025 அன்று நடைபெற்ற நலச்சங்க கூட்டத்தில் எங்களுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றினார்கள். அந்த தீர்மானம் எங்களை மிரட்டும் வகையில் அமைந்துள்ளது.

9. அந்த தீர்மானத்தை எங்கள் வளாகத்தில் உள்ள 1875 உரிமையாளர்களுக்கும் ஈமெயில் மூலமாகவும் மைகேட் செயலி மூலமாகவும் பகிர்ந்து எங்களுடைய நற்பெயரை களங்கப்படுத்தி வருகிறார்கள். எனவே எதிர்மனுதாரர்கள் எங்கள் பெயரை தொடர்ந்து களங்கப்படுத்தி வருவதாலும் எங்களை மிரட்டும் வகையில் நடந்து வருவதாலும் அவர்கள் நிறைவேற்றிய தீர்மானத்தில் இருந்து எங்களுக்கு எதிரான வாசகங்களை நீக்க கோரியும் அவர்கள் மீது உரிய குற்றவியல் நடவடிக்கை எடுப்பதற்காகவும் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளோம். எனவே இந்த தனிநபர் புகாரை கோப்பிற்கு எடுத்து அழைப்பானை சார் செய்து அவர்கள் எதிர்மனுதாரர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுத்து தண்டிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

S/d- K.Nilavarasan, 13.10.2025

District Munsif cum Judicial Magistrate,

Thiruporur